# முஸ்லிம் பெண்மணிக்கு மறுப்பு

அபூ நஜ்மி, நெல்லை, ஏர்வாடி.

டிசம்பர், 2001, ஜனவரி 2002, அல்முபீன் மாத இதழில், பிறை சம்பந்தமான மறுப்பு கட்டுரைக்கு, "அஞ்ஞான கட்டுரை" என்று சகோதரர் P.J. அவர்களால் எழுதப்பட்டு இருந்தது.

மே, 2002, முஸ்லிம் பெண்மணியில் தொழுகையில் விரலசைத்தல் சம்பந்தமான வாசகர் பக்கம் பகுதியில் சகோதரர் K.M.அப்துன் நாஸிர் அவர்கள் எழுதியது "அறியாமையின் வெளிப்பாடு"

இந்த இரண்டு கட்டுரைகளும், ஒரே கண்ணோட்டத்தில் எழுதப்பட்டவைதான் என்பதை வாசகர்கள் படித்து பார்த்தால் தெரியும். இதில் மௌலவிகள், என்கின்ற முல்லாக்கள் கை நிச்சயம் உண்டு என்பதை மே 2002 முஸ்லிம் பெண்மணியை படித்து பார்ப்பவர்கள் உணரலாம்.

மார்க்கத்தை தனது சொந்த சுயநலத்திற்காக வளைத்து, திரித்து கூறுவதுதான், அவர்களின் வழக்கமும், பழக்கமும், இவர்கள் அல்லாஹ்வுக்கு பயந்து நடந்து, மார்க்கத்தை, உள்ளது உள்ளபடி சொன்னால், இஸ்லாமிய சமுதாயத்தில் இவ்வளவு பெறிய, குழப்பங்களும், பிளவுகளும் நிச்சயம் வந்து இருக்காது. நபிஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லம் அவர்கள் விட்டு சென்ற ஒன்றுபட்டு, விட்டு சென்ற, முஸ்லிம் சமுதாயத்தை, சின்னா பின்னா, படுத்தியது இந்த முல்லாக்கள்தான் என்பதில் மாற்று கருத்து இருக்கமுடியாது. அல்லாஹ் அவர்களுக்கு நேர்வழிகாட்ட போதுமானவன் தொழுகையில் விரலசைத்தல், விசையத்தில் நமக்கொரு ஆச்சர்யம் என்னவென்றால் இந்த மௌவ்லவிகள், அரபி மொழியை நாங்கள் தான் கற்றரிந்தவர்கள் என்று பீற்றி கொள்ளும், இவர்களுக்கா? "யூஷீரு" "யுஹர்ரிகுஹா" என்ற பதத்தி விளக்கம் கூறவும், பிரித்து பார்க்கவும் முடியவில்லை? இவர்கள் தான் ஆலிம்களா?

உங்களை நீங்கள் பரிசுத்தவான்கள் என்று நீங்கள் பீற்றிக் கொள்கிறீர்களா (அல்குர்ஆன்)

யூஷீரு, யுஹர்ரிகுஹா, என்ற வார்த்தைக்கும் சபையில் பெருத்த வித்தியாசம் இருப்பதை கூட இந்த முல்லாக்கள், அறியாமல் இருப்பது, முழு பூசணிகாணை சோற்றில் மறைப்பது போலவே உள்ளது, கட் டுரையாளர், முஸ்லிம் பெண்மணியிடம் விளக்கம் கேட்களாம் என்று கூறுகிறார். அந்த நபரே இது போன்ற அரபிதெரிந்த மௌவ்லவி அல்லாத, அரபு தேசத்தில் (வேலை) பணிபுரியும் நமது சகோதரர்களிடமே கேட் டு தெறிந்து கொள்ளலாம் "இஷாரா" என்றால் செயல் மூலம் உணர்த்தல் (SIGNAL)என்பதை தெள்ள தெளிவாக கூறுவார்கள்.

முகல்லிது, மௌவ்லவிகளை போல் இந்த புதிய மத்ஹப் தௌஹீத் மௌலவிகளுக்கும் எந்த வித்தியாசத்தையும் காண முடியவில்லை, ஆக மொத்தத்தில் நம் சமுதாயத்தில, பெரும் குழப்பங்களும் சர்கைகளும் இருந்து கொண்டே இருப்பதர்க்கு இந்த முல்லாக்கள் தான் காரணம் என்பதில் அறிவுள்ள வர்கள் சிந்தித்து பார்க்க கடமை பட்டுஉள்ளார்கள். நபி ஸல்லல்லாஹீ அலைஹிவஸல்லாம் அவர்கள் தஷ்ஹ்ஹுதில், அமர்ந்தால் தமது வலக்கையை வலது முழங்காலின் மீதும், இடக்கையை இடது முழங்காலின் மீதும் வைத்து அதை ஐம்பத்தி மூன்று போல் ஆக்கி தமது சுட்டு விரலால் சமிக்கை செ ய்வார்கள் என்று இப்னு உமர்(ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (முஸ்லிம்) இப்னு உமர்(ரழி) அவர்கள்

அறிவிக்கும் மேல்கண்ட ஹதீஸை, அரபி ஒரளவு தெறிந்தவர்கள் நேரடியாக (முஸ்லிமிலோ) அல்லது எம்.எம்.அப்துல் காதிர்உமரி அவர்களால் மொழி பெயர்கபட்டு உள்ள "புலூகுர் மராம்" நபி மொழி தொகுப்பில் நாமே பார்க்கலாம். அந்த அரபி மொழி வாசகத்தில் இஷாரா என்றே வருகிறது. இஷாரா என்றால் இந்த இடத்தில் சுட்டி காட்டுதல் என்பதே சரியான விளக்கம் என்பதை நாம் அறியலாம். இஷாரா என்கின்ற அரபி வார்த்தைக்கு சுட்டி காட்டுதல், சமிக்கை என்றும் சொல்லலாம். கையை வேகமாக ஆட்டிகொண்டே யாரும் சமிக்கை செய்ய மாட்டார்கள், என்பதை கூட இந்த முல்லாக்கல் அறியாதவர்களா?

உதாரணமாக, ஒருவர் மூன்றாம் பிறையை இரண்டாம் பிறை என்று சொல்கிறார் என்று வைத்து கொள்வோம், மூன்றாம் பிறையை சுட்டிகாட்டுபவர், தனது கையை ஆட்டிகொண்டும், ஒன்றும், சுட்டிகாட்ட மாட்டார் என்பதை கூட இவர்கள் அறியாதவர்களா? கையை ஆட்டி கொண்டு சுட்டிக் காட்டினால் அறிவிலியும், நம்மை முட்டாள் என்றே சொல்வான்.

**மற்றொரு ஹதீதில்**

தொழுகையின், போது தனது ஒருகையால் பொடிக்கற்களை அசைத்துக் கொண்டிருந்த ஒரு மனிதரைக் கண்ட அப்துல்லாஹ் பின் உமர்(ரழி) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரை நீர் தொழுகையில் பொடிக்கற்களை அசைத்து விளையாடாதீர் நிச்சயமாக இது ஷைத்தானுடையதாகும். என்னும் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் செய்தது போன்று செய்வீராக என்றனர். அதற்கு அந்த மனிதர் "அல்லாஹ்வின் தூதர்" எப்படி செய்தார்கள் எனகேட்டார் "அதற்கு அப்துல்லாஹ்பின் உமர்(ரழி) (ரலி) அவர்கள்" நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தஷ்ஹ்ஹுதில் (இருப்பில்) வலது கையை வலது தொடையின் மீதும் வைத்து பெருவிரலுக்கு அடுத்துள்ள "ஆட்காட்டி" விரலைக் கொண்டு கிப்லாவை நோக்கி சமிக்கை செய்து அதை கூர்ந்து பார்த்த வண்ணம் இருந்தார்கள் என்று கூறிவிட்டு பின்பு இவ்வாறு அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் செ ய்ததை நான் பார்த்தேன் என்று அல்துல்லாஹ் பின் உமர்(ரழி) அவர்கள் கூறினார்கள்.

ஸுனன் நஸாயி முதல் பாகம்!

இப்படிபட்ட அழகான ஆதாரபூர்வமான ஹதீதுகள் இருக்கும் போது சந்தேகமான ஆஸிப் பின் குலைப் இடம் பெரும் ஹதீதை தூக்கி பிடித்து, பிடிவாதம் பிடிக்கும் புது மத்ஹப் முல்லாக்கள் மக்களே புரிந்து கொள்ளும் நாள் வெகு தூரத்தில் இல்லை இன்ஷா "அல்லாஹ்" வஸல்லாம்

ஜுன் 2002 அந்நஜாத்